கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இப்போதுள்ள கணக்குப்படி ஒரு டன்னுக்கு 2 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இப்போதுள்ள விறகு பற்றுக்குறையைப் போக்குவதற்கு, அரசாங்கம் காடுகளில் சில வகை மரங்களை வளர்ப்பதாக தெரிகிறது. அவ்விதம் வளர்க்கப்படுவது ஜங்கிள் வுட் வகையைச் சேர்ந்ததா அல்லது வேறு வகையைச் சேர்ந்ததா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: யூக்கலிப்டஸ் போன்ற வகைகள்தான் வளர்க்கப்படுகின்றன. ஜங்கிள் வுட் என்று தனியாக வளர்ப்பது இல்லை, தானுக வருவது தான்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, அரசாங்க நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் விறகு சரியாக எரியாது என்ற எண்ணம் மக்களிடையே இருந்து வருகிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் எரியக்கூடிய விறகைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயலுமா? அதோடு விலையையும் குறைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஒரு குண்டுக்கு ஒரு ரூபாய் 75 ந. பை. என்று விற்றுக் கொண்டிருந்ததை, இப்போது ஒரு ரூபாய் 50 ந. பை. விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இதன் மூலம் இப்போது கூடுதலாகவே ஓரளவுக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

அரிசி, நெல் கொள்முதல்

*198 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட அரிசி மில் சொந்தக்காரர்கள் தாங்கள் ஒப்புக்கொண்டபடி அரசாங்கத்திற்கு அரிசி சப்ளை செய்ய முடியாதென தெரிவித்துவிட்டனரா?

(இ) ஆம் என்ருல், என்ன காரணங்களுக்காக?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) & (இ) கொள்முதல் விலைக்கும் மார்க்கெட் விலைக்கும் இடையே தொடர்ந்து இருந்துவரும் விலை வித்தியாசத்தின் காரணமாக, தஞ்சாவூர் அரிசி மில் சொந்தக்காரர்கள் சங்கம் அரிசி சப்ளை செய்யும் நிலையில் இல்லை என்று 17—12—1963-ல் அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டது.